# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2254/44 - 2021 නොවැම්බර් මස 19 වැනි සිකුරාදා - 2021.11.19

*2254/44 ஆம் இலக்கம் - 2021 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 19 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

*ச. வ. பி. 19/78*(V)

**1978 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, நீதித்துறைச் சட்டம்**

13 ஆம் பிரிவின் கீழான கட்டளை

*1978 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, நீதித்துறைச் சட்டத்தின் 13 ஆம் பிரிவின்கீழ் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு, நீதி அமைச்சர் மொஹமட் அலி சப்ரி ஆகிய நான், இக்கட்டளை மூலம்-*

*(அ)* பின்வருவன உட்பட அம்பாந்தோட்டை நிருவாக மாவட்டத்தின் ஆள்புல எல்லைகளின் மீதும் அதன் ஆள்புல நீர்ப்பரப்புகளின் மீதும் கடலாண்மை நியாயாதிக்கத்தைப் பிரயோகிப்பதற்கு அம்பாந்தோட்டை நீதிமுறை வலயத்தில் அமர்கின்ற மேல் நீதிமன்ற நீதிபதிக்குத் தத்துவமளிக்கின்றேன்-

(i) *2017, செத்தெம்பர் 25 ஆந் திகதிய 2038/15 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 1979 ஆம் ஆண்டின் 51 ஆம் இலக்க, இலங்கைத் துறைமுகங்கள் அதிகார சபைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட கட்டளையிற் குறித்துரைக்கப்பட்டவாறு அம்பாந்தோட்டை நில மற்றும் துறைமுகத்தின் நீர்ப் பிரதேச எல்லைகள் ; அத்துடன்*

(ii) *2019, யூலை 22 ஆந் திகதிய 2133/7 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 1979 ஆம் ஆண்டின் 51 ஆம் இலக்க, இலங்கைத் துறைமுகங்கள் அதிகார சபைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட கட்டளையிற் குறித்துரைக்கப்பட்டவாறு கடல் பிரதேச எல்லைகள் ; அத்துடன்*

*(ஆ)* மேற்சொல்லப்பட்ட சட்டத்தின் 13 ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்டதும் 2021, ஒகத்து 6 ஆந் திகதிய 2239/51 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான கட்டளையை அதன்கீழ் ஆக்கப்பட்ட எதற்கும் பங்கமின்றி இல்லாதொழிக்கின்றேன்.

**எம். யூ. எம். அலி சப்ரி,**
நீதி அமைச்சர்.

கொழும்பு,
*2021, நவெம்பர் 05.*

*12-20*


1A - G 35395 - 60 (2021/11) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*